## நெடுங்குன்றம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை–திருமதி வனிதாஸ்ரீ அவர்கள்

**ந.க.எண் 06/2024/2025** **நாள்: 24.09.2024**

பொருள் செங்கல்பட்டு மாவட்டம் - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - நெடுங்குன்றம் ஊராட்சி – நெடுங்குன்றம் கிராமம் - CMDA – Area Plans Unit – Layout Division – Planning Permission - Proposal for Sub-division of house sites in **S.No 449/1A3B1, 466/3A1 & 3A2 of Nedugundram village** மனைபிரிவுகளுக்கு வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது - இறுதி மனைப்பிரிவு வரைப்பட ஒப்புதல் வழங்கி உத்திரவிடல்.

பார்வை 01.உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், 1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை - 600 008. அவர்களின் கடித எண்.ஆர்.டி.1/0141/2024, நாள். 30.08.2024

02.G.O(ms).No.181,Housing and Urban Development (UD(1)) Department,Dated:09.12.2020

03.மனுதாரர் Thiru.S.Goudhaman நாள் 30.08.2024

04.ஆணையாளர், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் ந.க.எண்.3116/2024/அ4, நாள் 19.09.2024

05. நெடுங்குன்றம் ஊராட்சி பல்வகை இரசீது எண்: 2024-2025/35/7/18/7/134 ,நாள் 24.09.2024 ரூபாய். 121485/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தொராயிரத்து நானூற்று என்பத்தைந்து மட்டும்)

உத்தரவு

பார்வையில் காணும் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடிதத்தின்படி, செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நெடுங்குன்றம் ஊராட்சி நெடுங்குன்றம் கிராமம் - CMDA – Area Plans Unit – Layout Division – Planning Permission - Proposal for Sub-division of house sites in **S.No 449/1A3B1, 466/3A1 & 3A2 of Nedugundram village of Nedugundram Village**, M/s. Elephantine Enterprises Pvt.Ltd.rep.by, Thiru.S.Goudhaman ,No.34, Kathiravan Salai, Neelankarai, Chennai -600 041 என்பவருக்கு மனைஉட்பிரிவு வரைபட அனுமதி கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி எல்லை கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.மனைபிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக் கற்களை கொண்டு மனுதாரர்கள் நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும். அதோடு தகுந்த சிறு பாலங்கள்,சாக்கடை, கூடிகால், துப்புறவு, தெருவிளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்துதர வேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.
2. தெரு முனையில் அமையும் மனைகளின் முனைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.
3. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரியங்களுக்காக தேர்வு செய்யப்பட்ட மனைகள் தவிர குடியிருப்பு வீடு

கட்டுவதற்கு மட்டுமே வேண்டுமல்லாது, குடை பண்டக சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது.

4. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும் தவிர எக்காலத்திலும் கட்டிடம் மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ மாற்றப்படுத்தும் வகையில் எந்த மனையும் திருத்தி அமைப்பதோ, ஊட்பிரிவளிப்பதோ மாறுபட்ட உபயோகத்திற்கு பயன்படுத்த கூடாது.
5. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களும் கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். மனையின் எல்லைக்குள் கட்டிட் வரம்புக்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து 5 அடி உயரத்திற்கு மேற்படாது சுற்றுச்சுவர் அல்லது வேலை தவிர வேறு எந்த கட்டிடமோ சுவரோ கட்டக் கூடாது.
6. மனையின் பின்புறம் எல்லைக்குள் கட்டிடத்திற்கும் இடையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 15 அடி அளவு உள்ள திறந்தவெளி இருக்க வேண்டும். இந்த பின்பக்க திறந்தவெளியில் கிணறு, மல அறை, எரு குழி, மாட்டுததொழுவம், உந்து வண்டியை நிறுத்த கொட்டகை சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம். ஆனால் அக்கட்டிடங்கள் மொத்தமாக பின் எல்லையில் நிலத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
7. ஊராட்சி நிபந்தனைக்குட்பட்டு வழங்கப்படுகிறது.
8. குடக்கால் போட தேவையான அளவிற்கு அதிகமாக தரைகளை சமப்படுத்த வேண்டும்.நிலச்சரிவை நேர் செய்யாவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கல் கழனி ஏற்படுத்தக் கூடாது.
9. மனையின் சொந்தகாரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுத்துவதாக எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுதிட்டங்கள் விற்பனை பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.
10. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு : மனைபிரிவு வரைபடம்

பெறுநர் :

M/s. Elephantine Enterprises Pvt.Ltd.rep.by,
Thiru.S.Goudhaman ,
No.34, Kathiravan Salai,
Neelankarai,
Chennai -600 041

தலைவர்
நெடுங்குன்றம் ஊராட்சி
24/9/2024

**நகல்** 2.உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது..

Do not waste water, use it economically.

Original

# Nedugundram Village Panchayat, Kattankolathur Block, Chengalpattu District

## Miscellaneous Receipt

Receipt Number : 2024-2025/35/7/18/7/134

Date : 24-09-2024 15:14

Name of the Payer : S Goudhaman

Payer Mobile Number : 9884912110

Mode of Payment : Demand Draft

| Demand No | Major Head | Minor Head | Receipt Detail | Amount (₹) |
|---|---|---|---|---|
| 440848 | Fees | Planning permit (Planning permit) | Sub Divison | 121,485 |
| | | | Total | **121,485** |

Rupees(₹) : One Lakh Twenty-One Thousand Four Hundred and Eigthy-Five Only

Panchayat Secretary,
Nedugundram Village Panchayat.

Executive Authority/
Village Panchayat President
Nedugundram Village Panchayat

*This is Computer Generated Bill. No Signature Required.

அனுப்புநர்

சா.பாபு,
ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம் ,
காட்டாங்கொளத்தூர்.

பெறுநர்

ஊராட்சி மன்றத் தலைவர்,
நெடுங்குன்றம் ஊராட்சி,
காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்.

ந.க.எண்.3116/ 2024/அ4 நாள்.19.09.2024

அம்மையீர்,

பொருள் - திட்ட வரைபட அனுமதி - செங்கல்பட்டு மாவட்டம் - வண்டலூர் வட்டம் - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - நெடுங்குன்றம் ஊராட்சி - நெடுங்குன்றம் கிராமம் - CMDA- Area Plans Unit - Layout Division - Planning Permission - Proposal for Sub-division of house sites in S.No.449/1A3B1, 466/3A1 & 3A2 of Nedungundram Village - மனை உட்பிரிவு வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது - இறுதி மனை உட்பிரிவு வரைப்பட ஒப்புதல் வழங்கிட பரிந்துரை செய்து அனுப்பி வைத்தல் - சார்ந்து.

பார்வை - 1.உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், 1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை - 600 008. அவர்களின் கடித எண்.Letter No.Layout-1/0141/2024, நாள்.30.08.2024.

2.G.O.(ms).No.181, Housing and Urban Development (UD4(1)) Department, Dated: 09.12.2020.

3.தொடர்புடைய ஆவணங்கள்.

**********

பார்வை 1-இல் காணும் கடிதத்தின்படி, செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், நெடுங்குன்றம் ஊராட்சி, நெடுங்குன்றம் கிராமம், CMDA- Area Plans Unit - Layout Division - Planning Permission - Proposal for Sub-division of house sites in S.No.449/1A3B1, 466/3A1 & 3A2 of Nedungundram Village-இல் மனை உட்பிரிவுகளுக்கு M/s.Elephantine Enterprises Pvt.Ltd.rep.by, Thiru.S.Goudhaman, Chennai - 600 041 என்பவர்களுக்கு மனை உட்பிரிவு திட்ட வரைப்பட அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி, நெடுங்குன்றம் ஊராட்சி, நெடுங்குன்றம் கிராமம், CMDA- Area Plans Unit - Layout Division - Planning Permission - Proposal for Sub-division of house sites in S.No.449/1A3B1, 466/3A1 & 3A2 of Nedungundram Village-இல் மனை உட்பிரிவு அனுமதி அளிக்கப்பட்ட வரைப்படங்கள் மற்றும் அனுமதி சீட்டு (Permit) அசலாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. மனுதாரர் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய அனுமதி கட்டணங்களை செலுத்திய பின்னர், இறுதி ஒப்புதல் வழங்க தெரிவிக்கப்படுகிறது.,

பார்வை 2-இல் காணும் அரசாணையின்படி, மனை உட்பிரிவுகளில் உள்ள சாலையினை ஊராட்சியின் பொது உபயோகத்திற்கு, தானமாக ஆணையாளர், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் என்ற பெயரில் தானபத்திர எண்.5748/2024, நாள்.16.08.2024-அன்று தாம்பரம் சார் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தானபத்திர நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 1-இல் காணும் கடிதத்தில் பத்தி எண்.5-இல் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி மனை உட்பிரிவு வரைப்பட அனுமதி வழங்கிடுமாறு ஊராட்சி மன்றத் தலைவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**நிபந்தனைகள்**

1. திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவில் சாலை அமைப்பட வேண்டும்.
2. சாலைகளின் இருபுறங்களிலும் மழைநீர் வடிகால்வாய் (CC Drain) அமைக்கப்பட வேண்டும்.
3. இணைப்பு சாலைகளில் கல்வெர்ட் அமைக்கப்பட வேண்டும்.

**இணைப்பு** -

1. திட்ட அனுமதி அளிக்கப்பட்ட வரைபடங்கள் (அசலாக)
2. திட்ட அனுமதி சீட்டு (Permit) (அசலாக)
3. தானப்பத்திர நகல் (Xerox Copy)

19/9/2024

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
காட்டாங்கொளத்தூர்.

19/09/2024

**நகல்**

1. M/s.Elephantine Enterprises Pvt.Ltd.rep.by,
Thiru.S.Goudhaman,
No.34, Kathiravan Salai,
Neelankarai,
Chennai - 600 041.

2. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு தகவலுக்காக.